# கவிவேந்தரின் கவிதைகளில் பக்தி

முனைவர் சு. தீபா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

அக்சிலியம் கல்லூரி, காந்திநகர், காட்பாடி, வேலூர் - 632006.

deepa.thiru7819@gmail.com

37

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமூகத்தில் அம் மனிதனை மீறிய ஒன்று அவனை நெறிப்படுத்துவதாக உணர்ந்த போது 'பக்தி' என்ற சொல் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த பக்தியையே, இறைவனை நெருங்கும் வழி என அனைவரும் கருதுகின்றனர். எண்ணத்தால், சொல்லால், செயலால், இறைமையை உணர்வது பக்தியின் தலையாய நோக்கமாகும். மனிதர்கள் தட்டுத் தடுமாறி, திசை மாறும் போது பக்தியை மிகப் பெரிய கருவியாகப் பயன்படுத்தி, ஒருவரை ஒருவர் திருத்திக் கொள்ளுகின்றனர். அந்த வகையில் ஆன்மிகச் சிந்தனைகள் இலக்கியங்களாக எழுதி வைக்கப்பட்டு நீதி புகட்டும் அறன்களாகி, மானுடத்தை பாதுகாக்கின்றன. சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை நெறிபிறழும் சமூகத்தை, நெறிப்படுத்தும் விளக்காக மாறி பக்தி இலக்கியங்கள் இயங்குகின்றன. தற்காலக் கவிதைகளில் மானுடம் பாடும் வானம்பாடி என வாழும் கவிவேந்தரான கவிஞர் மேத்தா, தமது வரிகளில் குறிப்பிட்டிருக்கும் பக்தி சார்ந்த செய்திகளையே இக்கட்டுரை
எடுத்தியம்புகிறது.

**திறவுச் சொற்கள்**

பக்தி என்பது - அறம் இல்லாத பக்தி - இயலாமையின் வெளிப்பாடு - ஆண்டவனுக்கான இடம் - தடுமாறும் நிலை - ஆயுதக் கிடங்கு - வணிக வளாகம்

**முன்னுரை**

எண்ணங்கள் மென்மையாக, தத்துவங்களே நெறியாக, காலங்கள் வழிநடத்த, காட்சிகள் நிதர்சனத்தை கற்பிக்க, விடை தேடும் வினாக்களை உள்வாங்கிப் பயணிக்கும் போது விடை பகரும் உத்தம சக்தியே பக்தி என்பதை உணர்த்தும் படிநிலைகளில் இலக்கியங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த இலக்கியங்கள் இறைவனை... அவனை உணர்த்தும் இறைமையை... இயற்கையாகவோ, நேர்மை என்றோ, உண்மை என்றோ, மனித நேயம் என்றோ, மனிதர்களைப் பண்படுத்தும் பல்வகைமைகளில் அடையாளப்படுத்துகின்றன. தற்கால இலக்கியங்களில் குறிப்பாக கவிதை இலக்கியங்களில், பக்தி... அறிவார்ந்த வகைமையில் வெளிப்படுத்தப்படுகிறது. நவீன இலக்கியப் படைப்பாளிகள் பக்தியை உணர்வு அறிவுத் திறனென அடையாளப்படுத்துகின்றனர். கவி வேந்தர் என அழைக்கப்படும் கவிஞர் மேத்தாவும் பக்தியை அப்படித்தான் உணர்வாகவும், ஆக்கப்பூர்வமாகவும், அன்பின் வழி எனவும் உணர்த்துகிறார். அத்தகைய வரிகளையே இக்கட்டுரை

முன்னிறுத்துகிறது.

**பக்தி என்பது**

பக்தி என்பது பரமனுக்கானது என்பதை விட பக்தர்களுக்கானது என்பதே ஆன்மீகம். இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படும் எதுவும் அவனை வணங்கும் மனிதர்களை சேருமானால் அதில் நிச்சயம் கடவுளைச் சேரும் அது தான் உண்மையான பக்தி இதனை,

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற் காமே!"

என்கிறார் திருமூலர் மிக எளிமையாக பக்தியை விளக்கும் வரிகள் இதனைத் தவிர வேறொன்று இருந்திட இயலாது. ( திருமந்திர விருந்து ப. 494)

ஆனால் இப்போதெல்லாம் பக்தி என்பது பகட்டாக மாறி வருகிறது எதிர்பார்ப்பு, ஏமாற்றம், ஏளனம், வணிகம் என பக்தியின் பெயரால் மனிதர்கள் பல்வேறு தடங்களில் பயணிப்பதை கவிஞர் மேத்தா மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

**அறம் இல்லா பக்தி**

பக்தி என்பது நேர்மையின் விதைப்பாக இருக்க வேண்டும். உண்மையின் விளைவாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் ஆன்மிகம் என்பது அறம் மீறும் வலிமை பெற்ற தடம் ஆகிவிட்டது. இல்லறமோ துறவறமோ எதுவாயினும் நல்லறத்தை நாடுவதில்லை என்பதனை,

"இல்லறத்தில் இன்பம் இல்லை!
துறவறத்தில் உண்மையில்லை!
நல்லறத்தைப் பேண
நாதியில்லை!" ( என்னுடைய போதி மரங்கள் ப.38)

எனக் கவிவேந்தர் குறிப்பிடுகிறார். பக்தி இழையோடும் உறுதிப்பொருள்கள் வலுவின்றியும், கொள்கை இன்றியும், நடமாடுவதைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார், உறுதியில்லாத ஆன்மிகம் இயலாமையால் வருந்துவதையும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

**இயலாமையின் வெளிப்பாடு**

தானே தன் முயற்சியால் தடம் பதிப்பதே மனிதக் கொள்கை. ஆனால் வெறும் பேச்சு, வெட்டிவாதம் என வாழும் மனிதர்கள் தம் வெறும் வாயில் அளப்பதற்கு பக்தியைத் தான் கைகொள்கின்றனர். இதனை,

"பெருமாள் கோவிலின் முன்
ஏராளமான பிச்சைக்காரர்கள்!
மசூதிகளின் முன்பு முண்டியடித்த படி
முஸாபர்கள்...

மாடி வீடுகளில் மகிழ்ச்சி குறையாமல்
வாழ்பவர் தமக்குள் வாதமிடுகிறார்
ராமர் கோவிலா? பாபர் மசூதியா?" ( கனவுக் குதிரைகள் ப. 72, 73)

என்று குறிப்பிடும் வரிகளில் வெட்டியாய் வாய் வலிக்கப் பேசுபவர்கள் கோவில்களின் வாசல்களிலும், மசூதிகளின் முன்பும், வாழ்வாதாரத்திற்காய்ப் போராடுபவர்களை பற்றி சிந்திப்பதே இல்லை. இவர்களின் பக்தி உயிருள்ளதா? உயிரற்றதா? என்ற வினாக்களை எழுப்புவதாகிறது என்கிறார் கவிஞர்.

**ஆண்டவனுக்கான இடம்**

மனிதர்கள், தெய்வங்களுக்கான இடம் இதுவெனக் கூறி ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு நிம்மதி இன்றி அலைகின்றனர். இதனைக் கவிஞர் மேத்தா,

“மனிதனே!
நீ இருக்க ஒரு இடம் தேடு!
ஆண்டவனுக்கு வேண்டிய இடத்தை
அவனே தேடிக் கொள்வான்!” (கனவுக் குதிரைகள் ப.16)

என்று குறிப்பிடுகிறார். பக்தியின் பெயரால் ஏற்படும் கலவரங்களை அடையாளப் படுத்துவதோடு, சண்டையிடும் மனிதர்கள் தமக்கான இடத்தை தக்கவைத்துக் கொள்ளவே இயலாத போது... ஆண்டவனுக்கான இடத்திற்காக சண்டை போடுவது எதற்காக என்கிறார். தன்னையே பாதுகாத்துக் கொள்ளத் தெரியாதவர்கள் ஆண்டவனுக்கு எப்படி அடையாளம் தர முடியும் என்கிறார். அதனால் ஆண்டவனுக்கான இடத்தை அவனே தேடிக்கொள்வான் என்றும் குறிப்பிடுகிறார். பக்தியினைக் காரணம் காட்டி சண்டைகள் உருவாவதை கவிஞர் குறிப்பிடுகிறார். இதுபோன்ற நிலைப்பாடுகள் சில நேரங்களில் தடுமாற்றத்தை தந்து விடுவதையும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

**தடுமாறும் நிலை**

பக்தி என்பது கருணையோடு செயல்படுவதையும் உள்ளடக்கியது. பக்தியின் பெயரால் வன்மம் கைக்கொள்ளப்படுமானால், கடவுளின் கதி என்னாவது? இதனை கவிஞர் மேத்தா,

“பக்தியைக் காட்டினால்
பரமன் மகிழ்வான்!
நீங்களோ உங்கள்
சக்தியைக் காட்டுகிறீர்கள்…
ஆண்டவன் சங்கடப்படுகிறான்!" (கனவுக்கு குதிரைகள் ப.16)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார் ஆண்டவனே சங்கடப்படும் வகையில் நவீன கால பக்தி இயங்குவது சற்றே அச்சமூட்டுகிறது. அதனால் கடவுளும் காயப்பட்டு போகிறான். இதனை,

“காயப்பட்டு கிடக்கிறான்
கடவுள்!

அவனுக்கு மருத்துவம் பார்க்க
மனிதர்களே வருவீரா?
மனிதர்களாய் வருவீரா?" (ஆ.அ.வீடு ப. 46)

என்று கவிஞர் குறிப்பிடுகிறார். மனிதம் மறந்த மனிதர்களை மனிதர்களாய் வருவீரா என கடவுளே கேட்கும் அளவிற்கு மனிதநேயம் தடுமாறி கிடைக்கிறது.

**ஆயுதங்களோடு மனிதர்கள்**

இப்போதெல்லாம் மனிதர்கள் சக மனிதரை எதிர்கொள்ளும் விதமே அதிகாரத் தோரணை தான். மற்றவரை எளிதாகக் கையாள வன்முறைகளை கையில் எடுக்கும் மனிதச் சமூகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது இதயத்தை ரணப்படுத்துவது போன்றதாகும். இதனை,

"நிராயுதபாணியாய்
இறைவன் நிற்கிறான்...
மசூதிகளிலும் கோவில்களிலும்
ஆயுதங்களைச் சேமித்து
அவனை அவமதிக்கலாமா?" ( கனவுக் குதிரைகள் ப. 17)

என்று குறிப்பிடுகிறார் கவிஞர். இறைவனுக்கான இடங்களெல்லாம் ஆயுதக் கிடங்காகியிருப்பது, நெருக்கடியான நினைவில் நம்மை ஆழ்த்துவது உண்மைதான்.

**வணிக வளாகம்**

மனித நாகரிகத்தில் பண்டமாற்று முறை என்பது, ஆரம்பகாலத்தில் வணிகத்தளத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இப்போதெல்லாம் ஆண்டவனிடத்திலும் இந்த பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டு வருகிறது. வேண்டுதல்களைக் குவியலாக ஆண்டவன் முன்கொட்டி விட்டு, "நீ எனக்கு இதைச் செய்தால், நான் உனக்கு இதைச் செய்வேன்" என்று வணிகம் பேசுவது மிக சாதாரணமாக நிகழ்கிறது. இறைவனை நாடும் போது மனமானது வெற்றிடமாய் இருக்க வேண்டும். மலர் போன்று மென்மையாக இருக்க வேண்டும். இதனை

"கோவில்களில் மசூதிகளில்
உன் குப்பைகளைக் கொட்டாதே!
இதயத்தைப் பூக்கூடையாக்கி
ஏந்திச் செல்!" (ஆ.அ.வீடு ப. 85)

என்று கவிஞர் குறிப்பிடுகிறார். வேண்டுதல் என்னும் பெயரில், ஆலயங்கள் கிடங்காக மாறிப் போயிருப்பதைக் கவிஞர் மிக அழகாக வெளிப்படுத்துகிறார்.

**நிறைவுரை**

கவி வேந்தர் மேத்தா தமது வரிகளில் பக்தியின் பல்வேறு வடிவங்களை விளக்கிச் செல்ல காணமுடிகிறது. பக்தன் இறைவனைப் பார்த்து என் மனதில் இரு என வேண்ட ஆண்டவனும் உடனே பறந்தான்... பக்தனின் செருப்பு கிடந்த இடத்திற்கு என்று கவிஞர் அங்கதமாய்க் குறிப்பிடும் வரிகள்

ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் இருப்பது தான். ஆலயம் வரும் பக்தர்களின் மனதிற்குள்ளே ஆண்டவனைத் தவிர மீதி அத்தனையும் நிழலாடும். ஆனால் பக்தி என்பது இதுவன்று… அது மனதை ஒருநிலைப்படுத்துவது, விருப்பு வெறுப்பற்ற நிலையில் இயங்குவது, தனித்தன்மை வாய்ந்தது என தனித்திறன்களின் அடையாளங்களோடு உலவுவதாகும். அப்படிப்பட்ட ஆன்மிகத்தைத் தான் நாம் எல்லோரும் தொலைத்து விட்டு தேடிக் கொண்டிருக்கிறோம். கவிஞர் மேத்தாவின் வரிகளில் இழையோடும் கருத்தும் அதுதான் என்றால் அது மிகையில்லை.

**பயன் படுத்திய நூல்கள்**

1.திருமூலரின் திருமந்திர விருந்து, திரு. சம்பந்தம், திருவரசு புத்தக நிலையம், தி.நகர், சென்னை - 17. பதிப்பு - 2004

2. மு. மேத்தா, கனவுக் குதிரைகள், திருமகள் நிலையம், தி. நகர், சென்னை - 17 பதிப்பு - 2007

3. மு. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், திருமகள் நிலையம், தி. நகர், சென்னை - 17 பதிப்பு - 2007

4. மு. மேத்தா, ஆகாயத்துக்கு அடுத்த வீடு , குமரன் பதிப்பகம், சென்னை - 17 பதிப்பு – மார்ச் 2007